# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

திங்கள் இருமுறை • திருவள்ளுவர் ஆண்டு 2057, - செப்டம்பர் 10, 2026 | Fortnightly E-paper • September 10, 2026




## பழைய தொடர்ச்சியும் - புதிய முயற்சியும்!

சுப. வீரபாண்டியன்

**திராவிட மாணவர் பேரவை - தென்மண்டலக் கூட்டம்**

**வலிமை பெறுகிறது பேரவை!**

தலையங்கம்

**இயக்கச் செய்திகள்**

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

திங்கள் இருமுறை ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - செப்டம்பர் 10, 2026

Fortnightly E-paper ● September 10, 2026


# பழைய தொடர்ச்சியும் – புதிய முயற்சியும்!

**சுப.வீரபாண்டியன்**

*திராவிட இயக்கத் தமிழர் பேரவை தொடங்கப்பட்டு, 19 ஆண்டுகள் விரைவில் நிறைவடைய இருக்கின்றன! இந்நிலையில் பரவலாகப் பல்வேறு கிளைகளைப் பேரவை விரித்திருக்கிறது!*

*அவற்றுள் கருஞ்சட்டைப் பதிப்பகமும், திராவிடப் பள்ளியும் பேரவையின் பெருமைக்குரிய இரண்டு கிளைகளாகத் தம் பணிகளை தொடர்ந்து கொண்டிருக்கின்றன!*

*2018 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கருஞ்சட்டைப் பதிப்பகம், ஏறத்தாழ 130 தலைப்புகளில் (titles) நூல்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறது! பல்வேறு துறைகள் சார்ந்த நூல்கள் வெளிவந்துள்ளன என்றாலும், திராவிட இயக்கம் சார்ந்த நூல்களின் எண்ணிக்கையே மிகக் கூடுதல்!*

*தோழர் பெல்ராஜன் தலைமையில் தோழர்கள் இக்லாஸ், இளங்கோ ஆகியோர் அரும்பாடுபட்டு பதிப்பகப் பணிகளைச் செய்து வருகின்றனர்!*

*நூல்களை வெளியிடுவதோடு நிறுத்தி விடாமல், திராவிட இயக்கத்தின் வரலாறு, கோட்பாடு ஆகியனவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில், ஒரு பள்ளியைத் தொடங்கினால் என்ன என்ற எண்ணம், கொரோனா என்னும் இருள் சூழ்ந்திருந்த 2020 ஆம் ஆண்டு, எங்கள் எண்ணங்களில் தோன்றியது!*

*அதே ஆண்டு, தந்தை பெரியார் பிறந்த நாளில், திமு கழகத் தலைவர் தளபதி அவர்கள், திராவிடப் பள்ளியை இணைய வழியில் தொடக்கி வைத்தார்!*

*இப்போது ஆறு ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன! இன்று வரையில், 2940 மாணவர்கள் அப்பள்ளியில் கற்றுத் தேர்ந்திருக்கிறார்கள்!*

*வரும் 27 ஆம் தேதி, சென்னை, அடையாறு, முத்தமிழ்ப் பேரவையில் அப்பள்ளியின் ஏழாம் ஆண்டு தொடக்க விழா நடைபெற இருக்கிறது!*

*முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ், மருத்துவர் எழிலன், திமுக மாணவர் பேரவை மாநிலச் செயலாளர் வீரமணி ஆகியோர் விழாவில் கலந்து கொள்கின்றனர்!*

*இந்தக் கல்வி ஆண்டு முதல், இன்னும் சில புதிய பாடத் திட்டங்களையும் இணைத்திட எண்ணியிருக்கிறோம்! புதிய புதிய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு ஏற்ப, நாமும் பல புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று கருத்தும் எழுந்துள்ளது!*

*பேரவைத் தோழர்கள் பொள்ளாச்சி உமாபதி, கார்த்திக், வெற்றிச் செல்வன், மதிவாணன் ஆகியோர் திராவிடப் பள்ளியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதில் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றனர்!*

*பழைய முயற்சியும், புதிய தொடர்ச்சி யுமாகப் பதிப்பகமும், பள்ளியும் வளர்ந்து கொண்டிருக்கின்றன - உங்கள் அன்பையும் ஆதரவையும் எதிர்நோக்கிய படி!* ●

# திராவிட மாணவர் பேரவை - தென்மண்டலக் கூட்டம்

திராவிட மாணவர் பேரவையின் தெற்கு மண்டல நிர்வாக குழு கூட்டம் 24-08-2026 அன்று தென்காசியில் மாநிலச் செயலாளர் தோழர். இரா .அருள் ஜோதி பாபா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் திராவிட மாணவர் பேரவையின் நிறுவனர் தோழர் சுப.வீரபாண்டியன் அவர்களும் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் சிற்பி செல்வராசு அவர்களும் காணொளிக்காட்சி வாயிலாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார்கள். தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த நிர்வாகிகள் நேரடியாக பங்கேற்றனர். மேலும் நிர்வாகிகளுக்கு அமைப்பினுடைய எதிர்காலப் பணி குறித்தும், செயல் திட்டங்கள் குறித்தும் ஆலோசனைகளும் வழிகாட்டி நெறிமுறைகளும் வழங்கப்பட்டது.




இக்கூட்டத்தில் 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது தீர்மானங்கள் கீழ்கண்டவாறு;-

### தீர்மானம்:1 |"அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகை - 316 மாணவர்களின் வாய்ப்பு இழப்பு ஆபத்து"

2026 2027 ஆண்டில் 375 மாணவர்கள் தகுதி பெற்று 316 பேர் இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் Offer Letter பெற்றனர். ஆனால் தமிழ்நாடு அரசின் நிதி உதவி கடிதத்தை UK பல்கலைக்கழகங்கள் CAS / விசாவுக்கு ஏற்க மறுத்தன. விண்ணப்பச் செயல்முறை தாமதமாக ஜூலை இறுதியில் முடிந்தது. மாணவர் சேர்க்கை காலக்கெடு ஆகஸ்ட் செப்டம்பர் மாதம் என்பதால் வாய்ப்பு இலக்க ஆபத்து உள்ளது.

ஆகவே, அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டத்தில் 316 மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் நிலையை உடனடியாக அரசு சரி செய்ய வேண்டும். நிதி மற்றும் விசா உத்தரவாதம் வழங்கிட அரசை வலியுறுத்துகிறது, திராவிட மாணவர் பேரவை

### தீர்மானம்:2 |"போதைப் பொருள் குறித்து தகவல் அளித்த இளைஞர்கள் படுகொலை கண்டனம்"

கோவையில் 19 வயது தலித் சமூகத்தைச் சார்ந்த மாணவன் அமுதன் போதைப்பொருள் தகவல் அளித்ததால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். சென்னையில் பயிலும் +2 மாணவர் தனுஷ் என்பவரும் அதே காரணத்தால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஆகஸ்ட்-2026 சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இதுகுறித்து கேள்வி எழுப்பிய போது அமைச்சர் கில்லி சரத் மீதான போதைப்பொருள் வீடியோ சர்ச்சை அதே நேரத்தில் எழுந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே போதைப்பொருள் ஒழிப்பு என முழங்கும் அரசு, தகவல் அளித்த இளைஞர்களை பாதுகாக்க தவறியதை திராவிட மாணவர் பேரவை வன்மையாக கண்டிப்பதுடன், அரசை உடனடியாக நீதி வழங்க ஆயத்தப் பணிகளை செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது.

### தீர்மானம்: 3 | "அம்பேத்கர் திட்டம் - நிதி தாமதம் மற்றும் ஆராய்ச்சி மாணவர் பாதிப்பு - கண்டனம்"

மலேசியாவில் PhD., பயிலும் மாணவர் பாரதிதாசனுக்கு இரண்டாம் ஆண்டு ஆராய்ச்சி நிதி நிறுத்தப்பட்டதாக புகார் எழுந்துள்ளது. அதற்கு சமூக நீதித்துறை அமைச்சர் வன்னிஅரசு அவர்கள் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என பதில் அளித்துள்ளார். ஆனால் மாணவர் ஆவணங்கள் சமர்ப்பித்து உள்ளதாக தெரிவித்துள்ளார். திமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் என்பதால் புறக்கணிக்கப்படுகிறதா என எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன.

ஆகவே, அம்பேத்கர் பெயரிலான திட்டத்தில் மாணவர்களை நடுக்கத்தில் விடும் இந்த தவெக அரசின் செயல்பாடுகளை திராவிட மாணவர் பேரவை கண்டிக்கிறது. மேலும் அனைத்து மாணவர்களுக்கும் நிதி மற்றும் நிலுவை நிதி உடனடியாக வழங்கப்பட வேண்டுமென்றும் இத்திட்டம் திறம்பட செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அரசுக்கு கோரிக்கை வைக்கப்படுகிறது

### தீர்மானம்:4 |"கருத்து சுதந்திர அடக்குமுறை, மாணவர் போராட்டங்களுக்குத் தடை, டிஜிடல் மீடியாவில் திருப்பன்குன்றம் பைல்ஸ் தடைக்குக் கண்டனங்கள்"

ஆட்சியின் முதல் விமர்சனம் காரணமாக காவல்துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஆகஸ்ட் 14-17 ஆகிய தேதிகளில் மாணவர் போராட்டம் தடுக்கப்படுவதற்கான

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

## முன்பக்கத் தொடர்ச்சி...

சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. (ஆகஸ்ட் 19-இல் திரும்பவும் பெறப்பட்டது)

ஆகவே பாசிச தமிழக வெற்றிக் கழக அரசின், ஜனநாயக உரிமைகளை அடக்கும் பாசிச அதிகார மனப்பான்மையை கண்டிக்கிறது திராவிட மாணவர் பேரவை. மேலும் மாணவர் போராட்ட உரிமைகள் நிரந்தரமாக பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், வெளியிடப்பட்டு திரும்பி பெறப்பட்ட சுற்றறிக்கைக்கான விளக்கத்தை அளித்திடுமாறு தமிழ்நாடு அரசை திராவிட மாணவர் பேரவை வலியுறுத்துகிறது.

### தீர்மானம்:5 |"தொகுதி மறுவரையறை - முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் அமித்ஷா சந்திப்புக்கு பிறகு நிலை மாற்றம் கண்டனம்"

2026 ஆகஸ்ட் 12 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் விஜய் கொண்டு வந்த தீர்மானத்தில் மக்களவை இடங்களை 543-இல் நிரந்தரமாக உறைய வைக்க வேண்டும்; மாநிலங்களுக்கு இடையிலான தற்போதைய பங்கீட்டை மாற்றக்கூடாது என உறுதியாக கோரப்பட்டது. ஆனால் செப்டம்பர் 10 அன்று மகாபலிபுரத்தில் நடைபெற்ற தென் மண்டல கவுன்சில் கூட்டத்தில் அமித்ஷா முன்னிலையில் முதல்வர் விஜய் மக்கள் தொகை கட்டுப்பாட்டில் வெற்றி பெற்ற மாநிலங்களின் பிரதிநிதித்துவ சதவீதம் குறையாததை சட்டரீதியாக உறுதி செய்ய வேண்டும் என மென்மையான நிலைப்பாட்டை எடுத்தார் "நிரந்தர உரைநிலை + 543 என்ற வார்த்தைகள் மறைக்கப்பட்டன.

ஆகவே, அமித்ஷா சந்திப்புக்குப் பிறகு தொகுதி மறு வரையறை விவகாரத்தில் தவெக அரசு நிலை மாறியது கடும் கண்டனத்திற்குரியது. நமது தமிழ்நாட்டின் பாராளமன்ற பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் உறுதியான நிலைப்பாட்டை உடனடியாக மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும் என்பது மட்டுமின்றி இரட்டைவேடம் போடும் தவெக அரசிற்கு திராவிட மாணவர் பேரவையின் கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

### தீர்மானம்:6 |"எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கைது- கண்டனம்"

அரசியல் கருத்து வேறுபாடுகள் ஜனநாயக விவாதத்தின் மூலம் தீர்க்கப்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சி, கருத்துச் சுதந்திரம் மற்றும் எதிர்க்கட்சியின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்." என்ற அடிப்படையில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கைதுக்கு திராவிட மாணவர் பேரவை தனது வலுவான கண்டனத்தை பதிவு செய்து, ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி இத்தீர்மானத்தை நிறைவேற்றுகிறது.

### தீர்மானம்:7 |"NEET தேர்வை முற்றிலுமாக ரத்து செய்ய வலியுறுத்தல்"

மாணவர்களின் கல்வி உரிமை சமத்துவமானதாக இருக்க வேண்டும், பொருளாதார சக்தியின் அடிப்படையில் கல்வி வாய்ப்புகள் தீர்மானிக்கப்படக் கூடாது. சமூகநீதியையும், சமமான கல்வி வாய்ப்பையும் உறுதி செய்யும் வகையில், NEET தேர்வு முறையை முற்றிலுமாக ரத்து செய்ய வேண்டும்"என திராவிட மாணவர் பேரவை வலியுறுத்துகிறது.

### தீர்மானம்:8 |"சாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச் சட்டம் இயற்றக் கோருதல் - தையூர் பிரவீன் குமார் படுகொலைக்கு கண்டனம்"

செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கம் அருகே தையூர் கிராமத்தைச் சேர்ந்த 23 வயது இளைஞர் கே. பிரவீன் குமார், சாதி மறுப்புக் காதலின் காரணமாகக் கொடூரமாகத் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட கோரச் சம்பவத்திற்கு இக்கூட்டம் தனது வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

ஆகவே, சாதி ஆணவப் படுகொலைகளை வேரறுக்கவும், இணையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் 'சாதி ஆணவக் கொலை தடுப்புத் தனிச் சட்டம்' (Special Act Against Honour Killings) உடனடியாக இயற்றப்பட வேண்டும் என்று அரசை வலியுறுத்துகிறது திராவிட மாணவர் பேரவை.

### தீர்மானம்:9 |"திராவிடப் பள்ளி ஆண்டு சேர்க்கை"

14-06-2026 அன்று நடைபெற்ற உயர்நிலை நிர்வாகக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்பது "திராவிட பள்ளிக்கு வரும் ஆண்டு சேர்க்கையாக திராவிட மாணவர் பேரவை சார்பாக 100 மாணவர்கள் சேர்க்கப் படுவதாகும்" மேலும் இத்தீர்மானத்தை நிறைவேற்றிடும் விதமாக திராவிட மாணவர் பேரவை தெற்கு மண்டலம் சார்பாக 25 மாணவர் சேர்க்கையை உறுதி செய்திட தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

### தீர்மானம்:10 |"திராவிட முழக்கம் ஆண்டுச் சந்தா"

திராவிட முழக்கம் மாத இதழுக்கான ஒரு ஆண்டு சந்தா, திராவிட மாணவர் பேரவை - தெற்கு மண்டலம் சார்பாக 25 நபர்களுக்கான செலுத்திட தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**தீர்மானம்:11:** "Ban NEET, Delimitation, EWS Reservation:10%, ஜனநாயக சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திர அடக்குமுறை போன்ற தலைப்புகளில், மாணவர்கள் மற்றும் இளைஞர்களை கூட்டி சென்னையில் கருத்தரங்கம் நடத்தப்படுவதாக தீர்மானிக்கப்படுகிறது"

மேற்கண்ட 11 தீர்மானங்கள் திராவிட மாணவர் பேரவையின் தென்மண்டல நிர்வாகக் குழு கூட்டத்தில் தீர்மானங்களாக முன்வைக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## மௌனம் கலைப்பாரா விஜய்?

ஒரு குழப்பமான நிலையில் தமிழ்நாடு அரசியல் இருக்கிறது. சட்டமன்றத்தில் பொய்களைத் தவிர ஆக்கபூர்வமானவை பேசப்படுவதில்லை.

எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு முதல்வர் விஜய் வாய்திறந்து பதில் சொல்வதில்லை. எதிர்கட்சித் தலைவர் உதயநிதியின் குற்றச்சாட்டுகளுக்குப் பதில்கூற முடியாமல், மூன்று நாள்களுக்குப்பின் பதில் சொல்கிறேன் என்று பாதியில் வெளியே செல்கிறார் முதல்வர்.

ஆதவ் அர்ஜுனாவும், நிர்மல்குமாரும் தான் ஆட்சியின் தலைவர்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அவர்களுக்குப் பின்னால் பாஜகவின் நிழல் தெரிகிறது.

பரந்தூர் விமான நிலையம் கைவிரிப்பு, தமிழ்த்தாய் வாழ்த்துக்கு இருட்டடிப்பு, தொகுதி மறுசீரைப்பில் இரட்டை வேடம் இப்படி பாஜகவிற்கான விஜயின் நிழல் நிஜமாகிக் கொண்டிருக்கிறது.

விசிகவும், இந்திய தேசிய முஸ்லிம் லீக்கும், இரு கம்யூனிஸ்டுகளும் ஆட்சிக்கு முட்டுக்கொடுப்பதற்குப் போட்டிபோடுகிறார்களே தவிர, நாட்டின் நலன் கருதி தட்டிக் கேட்பவர்களாக இல்லை.

இப்படிப்பட்ட குழப்பமான நிலையில், ஐயா தந்தை பெரியார் வழியில், தலைவர் ஸ்டாலின் கரங்களை வலுப்படுத்துவதில் 'திராவிட இயக்கத் தமிழர் பேரவை' பின்தங்கியது இல்லை.

பத்தொன்பது ஆண்டுகளைக் கடந்து செயல்பட்டுக் கொண்டு இருக்கும் பேரவை, முன்பைவிட இப்போது கூடுதல் முனைப்போடு செயல்படுகிறது.

பேரவைத் தலைவர், பொதுச் செயலாளர் வழிகாட்டலில் பேரவை ஆரியத்தை வீழ்த்தவும், திராவிடத்தை ஏந்தவும் வலிமையாக உறுதியேற்கிறது.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

உதவி ஆசிரியர்:
**வெற்றிச்செல்வன்**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## மதுரை தி.க.விழாவில் வழக்கறிஞர் வைரமுத்து




மதுரையில் திராவிடர் கழகம் சார்பில் 21.08.2026 அன்று நடைபெற்ற "எதிர்நீச்சலில் வென்ற பெரியார்" 80 ஆம் ஆண்டு விழா திறந்த வெளி மாநாட்டில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம. வைரமுத்து உரையாற்றினார். மாநாட்டில் தி.மு.க உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் மேனாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம் தொடக்கவுரை ஆற்றினார். திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் மாநாட்டு நிறைவுரை ஆற்றினார். நிகழ்ச்சியில் பேரவை மதுரை மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் பி.அமர்நாத், மாவட்டப் பொருளாளர் ஸ்டுடியோ சரவணன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்

# பேரவை: சேலம் செயற்குழுக் கூட்டம்

சேலம் மாவட்ட திராவிடத் இயக்கத் தமிழர் பேரவையின் செயற்குழுக் கூட்டம் 23-08-2026 அன்று மாலை அழகாபுரம் சமுதாயக்கூடத்தில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் தோழர் வரதராஜன் தலைமையில் பேரவையின் அமைப்பாளர்கள் தோழர் ரவிக்குமார், தோழர் சேரலாதன் ஆகியோர் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெற்றது.

மாநகரச் செயலாளர் தோழர் ஜெகநாதன் வரவேற்புரை ஆற்ற, மாநகரத் தலைவர் தோழர் திராவிட செல்வன் நன்றியுரையுடன் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது

இக்கூட்டத்தில் பேரவையின் மாவட்டச் செயற்குழுவினர்கள், பேரவைத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இக்கூட்டத்தில் இயற்றப்பட்டத் தீர்மானங்கள்:

1. பேரவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை உயர்த்த ஒவ்வொரு தோழர்களும் முயற்சிகளை மேற்கொண்டு செயல்படுத்திட வேண்டும்.
2. திராவிட முழக்கம் இதழுக்கு சேலம் மாவட்டத்தில் வரும் செப்டம்பர் மாதத்திற்குள் 100 சந்தாதாரர்களை சேர்க்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். இதற்குப் பொறுப்பாளராக தோழர் வரதராஜன், தோழர் திருநாவுக்கரசு நியமிக்கப் பட்டனர்
3. வரும் செப்டம்பர் 27ஆம் தேதி ஈரோட்டில் நடைபெற இருக்கும் மண்டல அளவிற்காண பயிலரங்கத்திற்கு சேலம் மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் கலந்து கொள்வது.





4. கருஞ்சட்டை பதிப்பகம் வெளியிட்டுள்ள அனைத்து நூல்களையும் சேலம் மாவட்ட தோழர்களின் பயன்பாட்டிற்கென வாங்கி நூலகம் போல செயல்படுத்து வேண்டும். இதற்குத் தோழர் சேரலாதன் பொறுப்பாளராக நியமிப்பது உள்ளிட்ட எட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

# மாங்காட்டில் மாணவர் பேரவையின் "கதை"







மாங்காடு நகராட்சி, பட்டூரில் திராவிட மாணவர் பேரவை சார்பாக நேற்று கதை இங்கதான் ஆரம்பிக்குது நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் தோழர் எழிலன் நாகநாதன், தோழர் மதிவதனி, தோழர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, தோழர் இந்திரகுமார் தேரடி, தோழர் சேகுவேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

1. இளைஞர்கள், Comment Section-ல இருந்து Constituency வரை.

2. 10% தான் Bro... ஆனா கதை ரொம்ப பெருசு.

3. Devil NEET, Leave Us Alone.

4. ஜனநாயகம் : Account Suspended.

5. Population Boom... Representation Doom

-ஆகிய தலைப்புகளில் தோழர்கள் அரசியல் நெடியுடன், முற்போக்கான கதைகளைச் சொன்னார்கள்.

மேலும் இந்நிகழ்வில் மாணவர்கள், இளைஞர்கள் 80 நபர்களும், நமது உணர்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் 45 பேரும், மாணவர் பேரவையின் நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.